# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை
## (திருத்தம்)

***1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நீதி அமைச்சர் அவர்களால் 2018, ஏப்பிறல் மாதம் 06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, மாச்சு மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ ***243 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2:** இவ்வாசகம், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் 122அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது, தவறொன்றைப் புரிந்துள்ளவரெனச் சார்த்தப்பட்ட பன்னிரண்டு வயதினரானவரும் அல்லது அதற்கு மேற்பட்டவரும் மற்றும் பதினான்கு வயதுக்குக் கீழ்ப்பட்டவருமான சிறுவரொருவர், தண்டனைச் சட்டக்கோவையின் 76 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகச் செயலாற்றுவதற்கு, அத்தகைய சிறுவரின் புரிந்துகொள்கை முதிர்ச்சியைப் பற்றி நீதிவான் தமது அபிப்பிராயத்தைக்கொள்வதற்கு அவருக்கு உதவுவதற்கென அரசாங்க மருத்துவ அலுவலரொருவரினால் அல்லது வேறு நிபுணரினால் அத்தகைய சிறுவரின் பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் சம்மதத்துடன் பரிசோதனை செய்யப்படுவதனை ஒரு பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் செய்விப்பதனை இயலச்செய்வதாகும்.

**குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை**
**(திருத்தம்)**

ச.வ.- ஓ 42/2016

**1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தில் 122அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.*

**2.** 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டத்தின் 122அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"பன்னிரண்டு வயதினையுடைய அல்லது பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்ட அத்துடன் பதினான்கு வயதிற்குட்பட்ட பிள்ளையொருவரினால் புரியப்பட்டுள்ளதாக சார்த்தப்பட்ட தவறொன்றின் விடயத்திலான மருத்துவப் பரிசோதனை.

122அ. (1) பன்னிரண்டு வயதினையுடைய அல்லது பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்ட அத்துடன் பதினான்கு வயதிற்குட்பட்ட பிள்ளையொருவரினால் புரியப்பட்டுள்ளதாக சார்த்தப்பட்ட தவறொன்றினைப் புலனாய்வு செய்கின்ற பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள அலுவலர் அத்தகைய பிள்ளையின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் சம்மதத்துடன்,-

(அ) அத்தகைய பிள்ளையானது சார்த்தப்பட்ட தவறொன்றின் தன்மையையும் விளைவாய்ந்தன்மையையும் அறிவதற்கு போதுமான முதிர்ச்சியை எய்தியிருந்தாரா எனவும்; அத்துடன்

(ஆ) அத்தகைய பிள்ளையானது ஏதேனும் சிகிச்சை முறையிலான இடையீட்டுத் தேவை உள்ளாரா எனவும்,

நீதிவான் தனது அபிப்பிராயத்தைக்கொள்வதற்கு, அவ்வழக்கில் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானை இயலச்செய்கின்ற அறிக்கை ஒன்றை பெற்றுக்கொள்வதற்கென அத்தகைய பிள்ளையை, அரசாங்க மருத்துவ அலுவலர் ஒருவரினால் அல்லது இயைபான துறையில் எவரேனும் வேறு நிபுணரினால் பரிசோதிக்கப்படச் செய்வித்தல் வேண்டும்.

(2) பிள்ளையின் அத்தகைய பெற்றோர் அல்லது பாதுகாவலர் பிள்ளையை அவ்வாறு பரிசோதிக்கப்படுவதற்கு சம்மதிக்காதவிடத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அவ்வழக்கில் நியாயாதிக்கம்கொண்ட நீதிவானுக்கு அத்தகைய பிள்ளையை பரிசோதிப்பதற்கு அத்தகைய அரசாங்க மருத்துவ அலுவலர் அல்லது வேறு நிபுணருக்கு அதிகாரமளிக்கின்ற கட்டளையொன்றுக்கென விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) அரசாங்க மருத்துவ அலுவலர் அல்லது வேறு நிபுணர் பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு தனது அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும். அவர், தண்டனைச் சட்டக்கோவையின் 76 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொண்டு, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு நீதிவான் தனது அபிப்பிராயத்தைக் கொள்வதற்கும் முடிபை மேற்கொள்வதற்கும் அவருக்கு உதவுவதற்கென நீதிவானுக்கு அத்தகைய அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.”.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.